**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 61/2021 |
| வழக்கு சாட்சி | : | PW10 |
| நாள் | : | 07.03.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | Dr.பி.சம்பத்குமார் | ஜாதி | : | |
| தந்தை– பெயர் | : | பரந்தாமன் | தொழில் | : | Doctor |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

1, 4 முதல் 6 எதிரிகள் ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. A3 split up.

**<u>முதல் விசாரணை</u> :**

நான் தற்போது பணிமலர் மருத்துவ கல்லூரியில் சட்டம் சார்ந்த மருத்துவதுறையில் பேராசியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2012 அன்று சென்னை ஸ்ரீராமசந்திர மருத்துவ கல்லூரியில் சட்டம் சார்ந்த மருத்துவதுறையில் பேராசியராக பணி புரிந்தேன். 18.08.2012 அன்று காலை 9.45 மணிக்கு வெள்ளவேடு ஆய்வாளர் அளித்த விண்ணபத்தின் பேரில் தங்கசாமி என்னும் 52 வயது மதிக்கதக்க ஆண் பிரேத்தை மருத்துவர் ஸ்ரீனிவாசலு போதி ரெட்டி கூர் ஆய்வு செய்து அறிக்கை சமர்பித்தார். அந்த அறிக்கையின் படி தற்போது நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன். அந்த அறிக்கை பிரேதத்தை வெள்ளவேடு காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் முருகேசன் என்பவர் அடையாளம் காட்ட 18.08.2012 அன்று காலை 9.45 மணிக்கு பிரேதத்தை பிரேத பிரசோதனை செய்ய ஆரம்பித்தார். அதன் படி

**வெளிபுற காயங்கள்**

1) உச்சம் தலையின் நடுபுறத்திலிருந்து வலது பக்கம் நோக்கி வலது பக்கம் காது முடிவடையும் வரை 23 செ.மி நீலமுள்ள தையல் செய்யப்பட்ட அறுவை சிகிச்சை வெட்டு காயம்

2) காயம் 1 வலது காதிலின் உள் பக்கத்தில் 10 செ.மி நீலமுள்ள ஓரளவு

குணமடைந்த வெட்டு காயம் பரவலாக வீக்கத்துடன் காணப்பட்டது

3) வலது பக்க உச்சம் தலை எலுமபின் மையத்திலிருந்து இடது காது 4 செ மி. மேலேயும் 6 x 3 செ. மி பரளப்பளவும் பல சிறிய பழுப்பு நிற சிறாய்பு காயங்கள் காணப்பட்டது.

4) இடது புற காதின் பின்புறத்தில் குணமடைந்து சிறாய்ப்புகள் காணப்பட்டது 5x 2.5 செ. மி பரப்பளவில் காணப்பட்டது.

5) இடது கையில் உள் பக்கத்தில் 3–ல் 1 பங்கு 4.5x 2 செ. மி அளவுள்ள நட்சத்திர வடி தையல் செய்யப்பட்ட பிளவு காயம் இருந்தது. வெட்டி பார்க்கும் போது ஓரளவு குணமடைந்து 0.25 செ. மி ஆழம் சிவப்பு நிற்த்தில் உள்ளது.

6) இடது துடையின் நடுபகுதியில் 27x 8.5 x 2 செ. மி அளவுக்கு ரத்து கட்டு காயம் இருந்தது.

7) வலது முழங்காலில் இருந்து காலின் பக்கவாட்டு பகுதியில் நடு பகுதி வரை 4 நீளமான கருப்பு நிற சிறாய்புகள் இருந்தது. வீக்கம் சூழப்பட்டு இருந்தது.

முதலாவது காயம் 5 x 2 செ.மி இரண்டாவது காயம் 9 x 2 செ. மி, மூன்றாவது காயம் 5x 2 செ. மி, 4வது காயம் 6 x 4 செ. மி அளவு இருந்தது. 1வது காயம் 2வது காயத்திலிருந்து 6 செ.மி இடைவேளி இருந்தது. 2வது காயமும், 3வது காயமும் 3 செ.மி இடைவேளி உள்ளது. 3வது காயமும், 4வது காயமும் 1 செ.மி துரத்தில் பிரிக்கப்பட்டிருந்தது.

8) வலது கனுக்காலில் உட்புறத்தில் 3 x 2 செ. மி x தசை ஆழம் ஒரு கருமையான சிறாய்பு காயம் ரத்தம் கட்டி இருந்தது.

9) வலது காலின் 6 x 2.5 செ. மி x தசை ஆழம் சிறாய்ப்பும் ரத்த கட்டும் காணப்பட்டது.

10) கழத்தின் முன்புறம் கீழ் பகுதியில் 4 தையல்கள் கொண்ட மூச்சுகுழாய் காயம் காணப்பட்டது.

**பிரேத்தின் மீது இருந்து உட்புற காயங்கள்**

1) இதையம் வால்வுகள், ரத்த குழாய்கள் சீறாக இருந்தது.

2) நுரையீரல் வெளிறி நிறத்தில் இருந்தது.

3) வயிறு ரத்து சூழ்ந்து வாசனை எதுவும் இல்லாமல் இருந்தது.

4) கல்லீரல், மண்ணிரல், சிறுநீரம் வெளிறி நிறத்தில் இருந்தது.

5) குடல்கள் – அரைக்கப்பட்ட உணவுகள் மற்றும் மலம் இருந்தது.

6) மண்டை ஓட்டை திறந்து பார்த்த போது உச்சம் தலையிலிருந்து வலது பக்கமாக ரத்த கட்டி காணப்பட்டது.

7) வலது பக்க தலையில் வி வடிவத்தில் மண்டை ஓடு அகற்றப்பட்டிருந்தது. மேற்கூறிய காயத்திலிருந்து 2 நீளமான விரிசல் எலும்பு முறிவு காணப்பட்டது. 1வது 4 செ.மி நீளமும் 2வது 2.5 செ.மி நீளமும் காணப்பட்டது. அதை சுற்றிலும் ரத்த கட்டு காணப்பட்டது.

8) மண்டை ஓட்டின் அடிப்பகுதியில் 8 செ. மீ நீள எலும்புகள் ரத்த கட்டுடன் காணப்பட்டது. அதன் கீழ் பகுதியில் 2 செ.மி ஆழம் கொண்ட ரத்தம் பிளந்த மூளை ஜெல் வடிவத்தில் காணப்பட்டது.

9) மூளை வீக்கத்துடன் இடை இடையே மெல்லிய ரத்தம் தொய்ந்து ரத்த கட்டியும் காணப்பட்டது.

தட அறிவியல் துறைக்கு ரத்த மாதிரிகள் அனுப்பப்பட்டது. மற்றும் ரத்தம் தொய்ந்த ஒரு சிறிய துணி துண்டு அனுப்பப்பட்டது. சோதனை முடிவில் எதுவும் உறுதியாக சொல்லமுடியவில்லை. அதன் பிறகு தட அறிவியல்துறை அறிக்கை கிடைக்க பெற்று இறந்து போன நபர் தலையில் ஏற்பட்ட காயத்தினால் இறந்திருக்க கூடும் என மருத்துவர் ஸ்ரீனிவாசலு போதி ரெட்டி வழங்கினார். அந்த சான்று நான் Attested வழங்கினேன். அந்த பிரேத பரிசோதனை அறிக்கை **அ.த.சா.ஆ.3** ஆகும். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**</u> இல்லை

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S/d.S.Tasneem
I Additional District & Sessions Judge,
Tiruvallur.